

விழுப்புரம் மாவட்டம் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடுசங்கம்மாவட்ட எய்ட்ஸ்தடுப்புமற்றும்கட்டுப்பாடு அலகுசார்பில்உலகஎய்ட்ஸ் தினம் கடைபிடிக்கப்பட்டது. விழுப்புரம் வழுதரட்டி பகுதியில் இயங்கி வரும் கிருபாலயா தொண்டு நிறுவனம் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான உதவிகள் செய்து வரும் இயக்குனர் அருட் சகோதரி சுவாதி அவர்களுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் பரமேஸ்வரி தலைமையில் கூடுதல் கலெக்டர் ஸ்ருதஞ்செய் நாராயணன் முன்னிலையில் பாராட்டப்பட்டு கேடயம் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் டாக்டர் ரமாதேவி, சுகாதாரப் பணிகள் இயக்குனர் டாக்டர் செந்தில்குமார், மாவட்ட திட்ட மேலாளர் கவிதா, காசநோய் பிரிவு டாக்டர் சுதாகர், ARTமருத்துவர் டாக்டர் ரவி ராஜா மற்றும் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அலகு மேற்பார்வையாளர் பிரேமா உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# திட்டக்குடியில் வீசிக தொண்டர்கள் அம்பேத்கர் திருவுருவப்படத்திற்கு அஞ்சலி செலுத்தினர்

திட்டக்குடி டிச 07-கடலூர் மாவட்டம் திட்டக்குடியில் புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கர் அவர்களின்67வது நினைவு நாளை முன்னிட்டு திட்டக்குடியில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் கடலூர் மேற்கு மாவட்ட செயலாளர் வீர. திராவிட மணி தலைமையில் வதிஷ்டபுரத்தில் இருந்து திட்டக்குடிபேருந்துநிலையம்வரைமாபெரும் பேரணி அணிவகுப்பு நடைபெற்றது மற்றும் பேருந்து நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த டாக்டர் அம்பேத்கர் திருஉருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது இந்நிகழ்வில் கலந்து கொண்ட பொறுப்பாளர்கள் திட்டக்குடி நகர செயலாளர்கு. கௌதமன் மாநிலத் துணைச் செயலாளர்கள் க. ராமகிருஷ்ணன் இரா செம்மல் தடா கணேசன் மு.மா தயா தமிழன்பன் ஒன்றிய செயலாளர்கள் ஜான் செங்குட்டுவன் இரா.ஆனந்தன் சஞ்சய்காந்தி சந்தோஷ்குமார் வேல்முருகன் நகர இணை செயலாளர் அ. முருகையன் நகர துணை செயலாளர் வழக்கறிஞர் கார்த்திகேயன் ஒன்றி துணை செயலாளர் கோடங்குடிக. வீரமணி மாவட்ட பொறுப்பாளர்கள் மு. சுப்பிரமணியன் கு.கென்ஷன் பிரபு ஊடக மையம் ம. பிரபாகரன் மாணவரணி விஜயகுமார் விடுதலை காசி வேல்மணி வேந்தன்ஒன்றிய துணை செயலாளர்கள் பி .முருகானந்தம் சுந்தர் ஜெயகாந்தன் ராஜமோகன் வினோத் கொத்தனூர் சுரேஷ் நாரையூர் பெரியசாமி த. பாலு சந்தோஷ் பெண்ணாடம் நகர செயலாளர் ஆற்றலரசு வேப்பூர் ஐயப்பன் திட்டக்குடி மகளிர் அணி காந்தம் தலைமையில் வதிஷ்டபுரத்தில் மகளிர் அணியினரும் மற்றும் பிரேம் பிரகாஷ் காமராஜ்சத்தியசீலன் கலைமணி கார்த்திக் படையப்பா சுரேஷ் மற்றும் பெருந்திரளாக அனைத்து நிலை பொறுப்பாளர்களும் முகாம் பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர்



ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டுபேரூராட்சியில், ரூ.2.89கோடி மதிப்பீட்டில்தினசரிசந்தை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டி, ரூ.83.70 இலட்சம் மதிப்பீட்டில் முடிவுற்ற பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து பேசினார்.

# HDFC வங்கி மற்றும் ரிசர்வ் பேங்க் இன்னோவேஷன் ஹப் ஆகியவை இணைந்து ஐ-இன்னோவேட் என்கிற முன்னெடுப்பைத் துவங்கியுள்ளன

சென்னை: மாற்றுத் திறனாளிகளின் மீது கவனம் செலுத்தும் ஃபின்டெக் (நிதி தொழில்நுட்ப) நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் - நாடு தழுவிய அளவில் 'ஐ-இன்னோவேட்' என்ற முன்னெடுப்பை அறிமுகப்படுத்தும் நோக்கில், 'ரிசர்வ் பேங்க் இன்னோவேஷன் ஹப்' மையத்துடன் ஒருங்கிணைந்து செயல்படவுள்ளதாக ஹெச்டிஎஃப்சி வங்கி தெரிவித்துள்ளது.அசிஸ்டிவ் டெக்னாலஜி எனப்படும் (AT) உதவித் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மேம்படுத்துவது மட்டுமில்லாமல், மாற்றுத் திறனாளிகளுக்காக அனைவரையும் உள்ளடக்கிய நிதிசார் செயல்பாடுகளை கொண்டுசேர்ப்பதில் ஒரு புரட்சியை ஏற்படுத்துவதிலும் இந்த முன்முயற்சி கவனம் செலுத்துகிறது. HDFC வங்கியின் ரீடெயில் பிரிவின் பேங்கிங் ஹெட், ஸ்மிதா பகத் கூறுகையில், "நம் நாட்டில் கிட்டத்தட்ட முக்கால்வாசி மாற்றுத் திறனாளிகள் கிராமப்புறங்களில் வசிக்கின்றனர். சிறப்பு உதவி தேவைப்படும் மாற்றுத்திறனாளி நபர்களுக்கு நம் நாட்டில் முறையான நிதிசார் சேவைகள் கிடைப்பதில்லை என்பதே நிதர்சனம். HDFC வங்கி RBIH-உடன் இணைந்து நிதிச் சேவைகளைப் பெறுவதில் உள்ள இடைவெளிகளைக் கண்டறிந்து, பொருளாதார சுதந்திரத்தன்மையை செயல்படுத்தவும், சிறப்பு உதவி தேவைப் படும் மாற்றுத்திறனாளி நபர்களுக்கு அதிகாரமளிக்கும் வகையில் - அனைவரையும் உள்ளடக்கிய நிதிசார் தயாரிப்புகளையும் கொண்டுவரவுள்ளது.

HDFC அனைவருக்குமான ஒரு வங்கியாகும், மற்றும் சிறப்பு உதவி தேவைப்படும் மாற்றுத்திறனாளி நபர்களை உள்ளடக்கிய நிதிசார் சேவைகள் என்பது ஒரு பிரிவினருக்கான முன்னெடுப்பாக மட்டுமில்லாமல் இது ஒட்டுமொத்த நாட்டின் பொருளாதார வளர்ச்சி, மற்றும் புதிய கண்டுபிடிப்புகளுக்கு ஒரு உத்வேகமூட்டும் காரணியாக செயல்படுமென்றும் நம்புகிறோம். எங்களது இலக்கு தெளிவாக உள்ளது - இந்திய நாட்டைப் போல பன்முகத்தன்மை கொண்ட ஒரு வங்கி அமைப்பை உருவாக்குவதே அந்த இலக்காகும்," என்று பெருமிதத்துடன் கூறினார்.RBIH-இன், கார்ப்பரேட் கம்யூனிகேஷன்ஸ், மார்க்கெட்டிங் மற்றும் பார்ட்னர்ஷிப் பிரிவின்ஹெட், ஷாலினி சஹாய் கூறுகையில், "நிதிசார் சேவைகளில் புதுமையையும், அனைவரையும் உள்ளடக்கி செல்ல வேண்டும் என்கிற இலக்கை நோக்கிய பயணத்தில் இந்த கூட்டணியானது ஒரு முக்கியபடிநிலையாக உள்ளது. ஐ-இன்னோவேட் மூலம், உதவித் தொழில்நுட்பம் மற்றும் நிதிசார் சேவைகள் ஆகியவைசந்திக்கும்புள்ளியில் அற்புதமான தீர்வுகளைக் கொண்டு வர வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாகவுள்ளோம்", என்று நம்பிக்கை தெரிவித்தார்.

# பி2பி கடன் வழங்கல், பத்திரங்கள் மற்றும் சோலாரில் கவனம் செலுத்தும் வெஸ்டட்



சென்னை, 07, டிச: முன்னணி டிஜிட்டல் முதலீட்டுத் தளமான வெஸ்டட், அமெரிக்க பங்கு முதலீட்டுத் தயாரிப்புகளில் அடைந்த வெற்றியை தாண்டி, பலதரப்பட்ட மாற்று வழிச் சொத்துக்களை வழங்குவதன் மூலம், அதன் சேவையில் ஒரு முக்கிய விரிவாக்கத்தை அறிவித்துள்ளது.

வெஸ்டட் எட்ஜ் மூலம் பி2பி கடன் வழங்கல் : முதலீட்டாளர்கள் தங்கள் நிலையான மாற்றுவழி வருமான போர்ட்ஃபோலியோவில் பி2பி கடன் வழங்கலையும் சேர்ப்பதற்கு வெஸ்டட் எட்ஜ் அனுமதிக்கிறது, இது 12% வரை சாத்தியமான வருமானத்தை வழங்குகிறது.

INR பத்திரங்கள்: வெஸ்டட் வாடிக்கையாளர்களுக்கு INR பத்திரங்கள் மூலம் நிலையான வருமானத்திற்கு மற்றொரு மாற்றுவழி முதலீட்டு வாய்ப்பு வழங்கப்படுகிறது. வெஸ்டட் வழங்கும் ஏ மற்றும் அதற்கு மேல் மதிப்பிடப்பட்ட கார்ப்பரேட் பத்திரங்கள் மற்றும் இந்திய அரசாங்கத்தால் ஆதரிக்கப்படும் அரசாங்கப் பத்திரங்களின் பட்டியலிடப்பட்ட கார்ப்பரேட் மற்றும் அரசாங்கப் பத்திரங்களின் நிர்வகிக்கப்பட்ட தேர்வு மூலம் 9-12% இடையே வருமானத்தை பெறலாம்.

சோலார்:ஸோலார்விருப்பங்களைவழங்கிதனிநபர்களுக்கு வருமானம் ஈட்டுவதற்கான வாய்ப்புடன் சேர்த்து இந்தியா சுத்தமான எரிசக்திக்கு மாறவும் வெஸ்டட் உதவுகிறது. வெஸ்டட் சோலார் மூலம், முதலீட்டாளர்கள் மேற்கூரை மின்சக்தி திட்டங்களில் சோலார் பேனல்களை சொந்தமாக வைத்திருக்கலாம் மற்றும் பேனலின் வாழ்நாளில் அதனால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தில் இருந்து சுமார் 10-13% உள் வருவாயை (IRR) சம்பாதிக்கலாம்.

வெஸ்டடின் தலைமை நிர்வாக அதிகாரியான விராம் ஷா கூறியது, "எங்கள் தற்போதைய அமெரிக்க முதலீட்டு விருப்பங்களில் கூடுதலான மாற்றுவழிச் சொத்துக்களை சேர்ப்பது எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. இம்மாதிரியான மாற்றுவழிச் சொத்துக்கள் எதிர்காலத்தில் செழிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். " என்றார்.




# பெண்கள் ஹோம்ஸ்டே ஓனர்களுக்கு அதிகாரம் அளிக்க பெண்கள் தொழில்முனைவோர் தளம் மற்றும் மேக்மைட்ரிப் பார்ட்னர்

சென்னை, 07, டிச: பெண்களின் தொழில்முனைவு மற்றும் தன்னம்பிக்கையை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு முன்முயற்சியில், மேக்மைட்ரிப் உடன் இணைந்து, நிதி ஆயோக்கின் கீழ் அடைகாக்கப்பட்ட மகளிர் தொழில்முனைவோர் தளம் (WEP) "புரொஜெக்ட் மைத்ரி" தொடங்கப்படுவதை அறிவிக்கிறது. இந்த தனித்துவமான முயற்சியானது, தொழில்முனைவோர், பொருளாதார வலுவூட்டல் மற்றும் சுதந்திரத்திற்கான பாதையாக, ஹோம்ஸ்டேகளின் பயன்படுத்தப்படாத திறனை மேம்படுத்துவதன்மூலம்,நாட்டின்வடகிழக்குபிராந்தியத்தில் உள்ள பெண்களுக்கு கவனம் செலுத்துகிறது.

இட்டாநகரில் உள்ள டோர்ஜி காண்டு மாநில மாநாட்டு மையத்தில் தொடங்கப்பட்ட, 'எனேப்ளிங் விமென்-லெட் டெவலப்மெண்ட் இன் அருணாச்சல்' (அருணாசலில் பெண்கள் தலைமையிலான வளர்ச்சியைசெயல்படுத்துதல்) என்ற தலைப்பில், அருணாச்சலப் பிரதேச முதல்வர் ஸ்ரீ பெமா காண்டு கலந்து கொண்டு, பாலின சமச்சீர் முன்னேற்றத்திற்கான மாநிலத்தின் உறுதிப்பாட்டைக் குறிக்கிறது.

ப்ராஜெக்ட் மைத்ரி என்பது நாட்டின் அனைத்து வடகிழக்கு மாநிலங்களிலும் உள்ள ஹோம்ஸ்டே ஓனர்களுக்கு அதிகாரம் அளிக்கவும் ஊக்கப்படுத்தவும் வடிவமைக்கப்பட்ட ஒரு முன்னோக்கு சிந்தனை முயற்சியாகும். திட்டத்தின் ஒரு பகுதியாக, தேர்ந்தெடுக்கப்பட்ட பங்கேற்பாளர்கள் தங்கள் தனிப்பட்ட வணிகத் தேவைகளுக்கு ஏற்ப சிறப்புப் பயிற்சி பெறுவார்கள். இந்த பயிற்சியானது விருந்தோம்பல், பாதுகாப்பு, டிஜிட்டல் மார்க்கெட்டிங் மற்றும் இணக்கம் உள்ளிட்ட பல்வேறு திறன்களை உள்ளடக்கும். கூடுதலாக, முதல் மூன்று ஹோம்ஸ்டே ஓனர்கள் விருதுகளுடன் அங்கீகரிக்கப்படுவார்கள், மேலும் இந்தத் துறையில் சிறப்பான மற்றும் புதுமைகளை ஊக்குவிக்கும்.

மேக்மைட்ரிப் இன் இணை நிறுவனர் மற்றும் குழு தலைமை நிர்வாக அதிகாரி ராஜேஷ் மாகோ கூறுகையில், "பயணத்தின் மாற்றும் சக்தியை நாங்கள் நம்புகிறோம், மேலும் இந்த திட்டத்தின் மூலம், பெண்கள் ஹோம்ஸ்டே ஓனர்களுக்கு இந்த அதிகாரத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். இந்த முயற்சியில் பெண்கள் தொழில்முனைவோர் தளத்துடன் இணைந்து செயல்படுவதில் பெருமிதம் கொள்கிறோம், மேலும் இந்தியாவின் சுற்றுலாத் துறையின் அதிர்வு மற்றும் பன்முகத்தன்மைக்கு பங்களிக்கும் இந்த நம்பமுடியாத பெண் தொழில்முனைவோர் வளர்ச்சியடைவதைக் காண ஆவலுடன் காத்திருக்கிறோம் என கூறினார்.

## பத்திரம் காணவில்லை

கடலூர் மாவட்டம் வேப்பூர் வட்டம் இலங்கியனூர் கிராமம் 2/51 சந்துதெரு என்ற முகவரியில் வசிக்கும் காலம் சென்ற வடமலை மனைவி பத்மாவதி என்பவர் காவல் நிலையம் ஆஜராகி எனது மாமனார் காலஞ்சென்ற மாரி என்கிற மாரிமுத்து பெயரில் கூட்டாக உள்ள மங்கலம்பேட்டை சார்பதிவாளர் அலுவலக பத்திர எண்:601/1969 மற்றும்1052/1983 பத்திரங்களை கடந்த 07:10:2023 ஆம் தேதியில் தனது வீட்டில் இருந்து நல்லூர் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு இரு சக்கர வாகனத்தில் எடுத்து செல்லும்போது வழியில் எங்கேயோ தொலைந்து விட்டது என கொடுத்த மனு மீது பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை என்பதால் வேப்பூர் காவல் நிலையத்தில்.01:12:2023. தேதி ஆன்லைன் புகார் கொடுத்து உள்ளேன் புகார் எண்.CRV23281783 பத்திரத்தை கண்டுபிடித்து தருமாறு புகார் மனு.

மங்கலம்பேட்டை சார்பதிவாளர் அலுவலகம். ஆவண எண்.601/1969,1052/1983 ஆகும்.

பத்மாவதி, க/பெ வடமலை
2/51 சந்து தெரு இலங்கியனூர் கிராமம், வேப்பூர் வட்டம்,
கடலூர் மாவட்டம்,906302.
செல் நம்பர் : 8341033172.

**IndoStar Home Finance Private Limited** INDOSTAR
Regd. Office: - Unit No. 305, 3rd Floor, Wing 2/E, Corporate Avenue, Andheri- Ghatkopar Link Road, Chakala, Andheri (East), Mumbai – 400093
CIN : U65990MH2016PTC271587 Tel: +91 22 45107701
Email: connect@indostarhfc.com; Website: www.indostarhfc.com

NPTC ஷெட்க்கு எதிரே உள்ள பிளாக் எண்.5, தெக்கலை ரோடு, காரைக்குடி, மதுரை-630002, பிளாக் எண்.5ல் உள்ள நிறுவனத்தின் கிளை அலுவலகம், 2021-ன் முதன்மை திசை-வங்கி அல்லாத நிதி நிறுவனம் - ஹவுசிங் ஃபைனான்ஸ் கம்பெனி (ரிசர்வ் வங்கி) திசைகளின் 93வது பத்தியின் அடிப்படையில் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. மார்ச் 04, 2024 வணிக நேரத்தின் முடிவில் இருந்து மூடப்படும். எண்.576, சூடாமணி நகர், 120 அடி சாலை தெற்கு, காரைக்குடி, சிவகங்கை மாவட்டம், தமிழ்நாடு - 630561 இல் அமைந்துள்ள அருகிலுள்ள கிளை அலுவலகத்திற்கு செயல்பாடுகள் மாற்றப்படுகின்றன. ஏதேனும் உதவி தேவைப்பட்டால், அருகிலுள்ள கிளை அலுவலகத்தை நீங்கள் தொடர்பு கொள்ளலாம். மேலே குறிப்பிடப்பட்டுள்ளது அல்லது connect@indostarhfc.com க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.
இந்த அறிவிப்பை நிறுவனத்தின் இணையதளத்தில் (www.indostarhfc.com) அணுகலாம்.

இந்தோஸ்டார் ஹோம் ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்
Sd/-
நிதி சதானி
நிறுவனத்தின் செயலாளர்
தேதி: 06.12.2023



# ரூ.10 இலட்சம் மாநாட்டு நிதி

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 2-வது இளைஞரணி மாநில மாநாடு சேலத்தில் நடைபெறுகிறது. மாநாடு வெற்றி பெற தமிழகமெங்கும் சுற்றுப் பயணம் சென்று அனைத்து மாவட்டங்களிலும் செயல் வீரர்கள் கூட்டம் நடத்தி ஆலோசனை செய்து வருகிறார். கரூரில் செயல் வீரர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ள வந்த அமைச்சர் உதயநிதி ஸ்டாலினை நேரில் சந்தித்து மாநில நெசவாளர் அணி செயலாளர், ஈரோடு சட்டக் கல்லூரி தலைவர் சிந்து ரவிச்சந்திரன், ஈரோடு சட்டக் கல்லூரி இணை செயலாளர் அருண் பாலாஜி, ஸ்ரீ சாய் சிந்து இன்ஃப்ரா பிரவேட் லிமிடெட்- ன் துணைத் தலைவர் கிஷோர் மற்றும் மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் பிரகாஷ் ஆகியோர் சாய் சிந்து பவுண் டேசன் சார்பாக ரூ.10 இலட்சம் மாநாட்டு நிதி வழங்கினார்கள்.

மேன்மைமிகு சார் ஆட்சியர்
அவர்கள் கடலூர்
அ.தி.மு. /2023

மனுதாரர் :–
பக்கிரிசாமி
த/பெ. ஆறுமுகம் (லேட்), No.139. சின்னைக்கால், பச்சையங்குப்பம் கடலூர் தாலுக்கா, கடலூர் மாவட்டம்.
எதிர்மனுதாரர் :–
கடலூர் வருவாய் வட்டாட்சியர் அவர்கள், கடலூர்மாவட்டம்.

மேற்படி மனுதாரரின் அம்மா ரத்தினாம்பாள் க/பெ.ஆறுமுகம் (லேட்) என்பவர் கடந்த 23–05–2006 அன்று மேற்படி விலாசத்தில் உள்ள வீட்டில் இறந்தார் மேற்படி இறந்தை எதிர் மனுதரர் அலுவலத்தில் பதிவு செய்ய தவறியதால் மனுதாரரி அம்மா ரத்தினாம்பாள் இறப்பு சான்றிதழ் வழங்க எதிர் மனுதாரரிடம் உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவின் மீது யாருக்காவது ஆட்சேபனை இருப்பின் 15–நாட்களுக்குள் மேற்படி எதிர் மனுதாரர் அலுவலகத்தில் காலை 10.30 மணிக்கு தெரி விக்கவும் தவறும் பட்சத்தில் மனுதாரருக்கு ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

மனுதாரர்:–
பக்கிரிசாமி, த/பெ.ஆறுமுகம்
No.139 சின்னதைக்கால்,
பச்சையாங்குப்பம்,
கடலூர் தாலுக்கா,
கடலூர் மாவட்டம்.

மேன்மைமிகு சிறப்பு சார்பு நீதிமன்றம்
கடலூர்
I.A.383/2020 MCOP.382/ 2017

மாறன். த/பெ மாயகிருஷ்ணன்
வடக்கு தெரு,
கீழத்துக்குடி, தர்மதானபுரம்,
ஆத்துக்குடி, நாகை.
.... மனுதாரர்
–எதிர்–
நவீன்குமார், த/பெ அப்பாவு
நெ.12/39B, சிவாஜி நகர்,
போளுர், திருவண்ணாமலை
...1–ம் எதிர்மனுதாரர்

1ஆம் எதிர்மனுதாரருக்கு
கொடுக்கும் நோட்டீஸ்

மேற்படி நெம்பரில் தங்களுக்கு சொந்தமான வாகன பதிவு எண். TN–18–L–5499 Sip drier Car என்ற வாகனத்தில் கடந்த 12.10.2016 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் மனுதாரர் கொடுங்காயம் அடைந்ததற்கு நஷ்டஈடு ரூ.2,00,000/யை கோரி மனுதாரர் சமூகம் கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கில் தங்களுக்கு நோட்டீஸ் வாய்தாவாக வருகின்ற 12.12.2023 அன்று காலை 10:00 மணியளவில் தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ மேற்படி கோர்ட்டில் வந்து ஆஜராகி தங்களின் ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. இல்லையேல், தவறும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்மானம் வழங்கப்படும் என்பதை இதன் மூலம் அறிவிக்கிறோம்.

என்.அழகியகுமரன் பி.ஏ.,பி.எல்.,
மனுதாரர் வழக்கறிஞர்
கடலூர்

மேன்மைமிகு தொழிலாளர் இணை
ஆணையர் சரகம் 2, சென்னை
(முகாம்; – கடலூர்)
இ.சி. எண். 159 /2023

பேபி, க/பெ. முத்துக்கிருஷ்ணன்
எண் 52 மோரை எவரெஸ்ட்புரம்,
நெல்லிக்குப்பம்,
பண்ருட்டி வட்டம்
.. மனுதாரர்கள்
மற்றும் ஒருவர்
–எதிர்–
கருணாகரன்,
த/பெ. கிருஷ்ணன்
எண். 28 இவது குறுக்கு,
டி.வி.கே. நகர், முதலியார்பேட்,
புதுச்சேரி
.. 1–ம் எதிர்தரப்பினர்

1–ம் எதிர்தரப்பினருக்கு நோட்டீஸ்

இந்த நெம்பர் 1–ம் மனுதாரரின் மகன் கடந்த 19–06–2023 அன்று தங்களுக்கு சொந்தமான துர்கா பிரைவேட் பஸ் பதிவெண் PY–01–BW–9599 என்ற பேருந்தில் ஓட்டுநராக பணிபுரியும் போது ஏற்பட்ட விபத்தில் அடிப்பட்டு இறந்தமைக்காக இழப்பீடு கோரி மனு கொடுத்தும், அதன் பேரில் தாங்கள் ஆஜராக நோட்டீஸ் வாய்தா 15–12–2023 அன்று வைக்கப்பட்டுள்ளது. இதில் தங்களுக்கு ஆட்சேபணை இருப்பின் அன்று காலை 10.00 மணிக்கு மேற்படி கோர்ட்டில் தாங்களோ அல்லது தங்களது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

எம். சிவமணி, பி.ஏ., பி.எல்.,
மனுதாரரின் வழக்கறிஞர்
கடலூர்

மேன்மைமிகு முதன்மை மாவட்ட
உரிமையியல் நீதிமன்றம், புதுச்சேரி.
O.S. No.1342 OF 2023

1. விஜயலட்சுமி, 2. சீனிவாசன்
3. தனுஜா –வாதிகள்
எதிர்
பிரபு –பிரதிவாதி

பொது அறிவிப்பு

மேற்கண்ட வாதிகள் புதுச்சேரி மாநிலம், முதலியார்பேட்டை, 2–வது குறுக்கு வீதி, போலீஸ் தெரு, நெ.3–ல் வசித்து வந்த தண்டபாணி, த/பெ. வேனுகோபால் அவர்கள் கடந்த 2.5.2016 அன்று இரவு சுமார் 8.30 மணியளவில் காணாமல் சென்றுவிட்டார். அதன் தொடர்பாக புதுச்சேரி முதலியார்பேட்டை காவல் நிலையத்தில் F.I.R. No.130/2016 ஆக குற்ற வழக்குபதிவு செய்யப்பட்டு மேற்படி திரு. தண்டபாணி அவர்களை கண்டுபிடிக்க முடிய வில்லை என்று கடந்த 19.7.2018 அன்று முதலியார்பேட்டை காவல் நிலையத்தால் இறுதி அறிக்கை கொடுக்கப்பட்டது. ஆகவே மேற்படி காணாமல்போன தண்டபாணி அவர்களை சிவில் இறப்பு அறிவிப்பு செய்ய வேண்டும் என்றும், மேற்படி தண்டபாணி அவர்களுக்கு மேற்படி வாதிகள் மட்டுமே சட்டப் பூர்வமான வாரிசுதாரர்கள் என அறிவிக்கக்கோரியும் மேற்படி நீதி மன்றத்தில் வாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். மேற்படி வழக்கானது வருகின்ற 18.12.2023 அன்று காலை 10.00 மணிக்கு மேற்படி நீதிமன்றத்தில் விசா ரணைக்கு வருகின்றது. மேற்படி வழக்கில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் தாங்கள் மேற்கண்ட நீதிமன்றத்தில் மேற்படி தேதியில் வழக்கறிஞர் மூலமாகவோ அல்லது நேரிலோ ஆஜராகி தங்கள் ஆட்சேபனை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும்பட்சத்தில் வாதிகள் கோரியபடி தீர்மானிக்கப் படும் என்பதை இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

R. MUTHUVELAN, B.A.,LL.B.,
Advocate, Puducherry.

புதுச்சேரி மேன்மைமிகு மோட்டார்
வாகன விபத்து கூடுதல் தீர்ப்பாயம்,
(SO-CUM-ASJ) புதுச்சேரி
MACTOP. No.879/ 2023

அஷ்ரப் அலி –மனுதாரர்
எதிர்
1. சரவணன்
2. பொறுப்பு அதிகாரி, ராயல் சுந்தரம் பொது காப்பீட்டு நிறுவனம், புதுச்சேரி.
3. அசைன் குட்டூஸ்
4. பொறுப்பு அதிகாரி, HDFC IRGO பொதுக்காப்பீட்டு நிறுவனம், புதுச்சேரி. –எதிர்மனுதாரர்கள்

முதல் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு

மனுதாரர் கனம் நீதிமன்றத்தில் தனக்கு ஏற்பட்ட மோட்டார் வாகன விபத்திற்கு நட்டஈடு வேண்டி மனுதாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு வருகின்ற 21.12.2023–ந்தேதி காலை 10.00 மணிக்கு கனம் தீர்ப்பாயத்தில் வாய்தா வைக்கப்பட்டுள்ளது. தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ நீதிமன்றத்தில் ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவிக்க வேண்டும். தவறும்பட்சத்தில் தங்களுக்கு எதிராக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

P. தாமோதரன், B.A., B.L.,
G. சுதா, B.A., LL.B.,
மனுதாரர் வழக்கறிஞர்கள், புதுச்சேரி.

IN THE COURT OF HON'BLE
MOTOR ACCIDENT CLAIMS
TRIBUNAL (AMACT)AT
PUDUCHERY
MACTOP.NO. 635/2023

Krishnamoorthy . . . Petitioner
Vs.
1. Sarbeswarar
2. The Branch Manager, HDFC ERGO General Insurance Co. Ltd., Puducherry
. . . Respondents

RESPONDENT NO: 1
Sarbeswarar, S/o. Sivakumar,
No.10, SoolaiMedhu,
1st Street, Nethaji Nagar - II,
Uppalam, Puducherry

NOTICE TO RESPONDENT No.1

Please take Notice that the above claim Petition filed the above MACTOP NO: 635/2023 for claiming Compensation and the same is posted on 03.01.2024 for your appearance and filling your objection if any and you may appear either in person or said day at 10.00. a.m. before this Hon'ble Tribunal failing which matter will be decided on merits.

N.RAVI, B.A., LL.B.,
Advocate, Pondicherry.

IN THE COURT OF HON'BLE
MOTOR ACCIDENT CLAIMS
TRIBUNAL (PSJ)
AT PUDUCHERY
MACTOP.NO. 465/2023

Dinakaran . . . Petitioner
Vs.
1. Baskar
2. Lavanya
3. The Branch Manager, United India Insurance Co. Ltd., Puducherry . . . Respondents

RESPONDENT NO: 1
Baskar, S/o. Deenadhayalan,
No.7, Rotary Nagar – 1st Street,
Chennai – 600005
RESPONDENT NO.2
Mrs. Lavanya M
No.47, Chairman Sambasivam St.,
Kanchipuram, Tamilnadu - 631501

NOTICE TO RESPONDENT No: 1& 2

Please take Notice that the above claim Petition filed the above MACTOP No:465/2023 for claiming Compensation and the same is posted on 19.01.2024 for your appearance and filling your objection if any and you may appear either in person or said day at 10.00 A.M. before this Hon'ble Tribunal failing which matter will be decided on merits.

N.RAVI, B.A., LL.B.,
Advocate, Pondicherry.

IN THE COURT OF THE
I-ADDITIONAL DISTRICT
MUSIF AT PONDICHERRY
O.S. No.1192 of 2021

1. ARIVAN ...Plaintiff
Vs.
1. R. SATHIA
2. P. RADJESH ...Defendants

பொது அறிவிப்பு

மேற்கண்ட வழக்கில் 2–வது பிரதிவாதிக்கான அறிவிப்பு மேற்சொன்ன நீதிமன்ற அழைப்பாணை அனுப்பியும் எந்த பலனும் இல்லாததால் நீதிமன்ற உத்தரவின்படி தங்களுக்கு கொடுக்கும் பொது அறிவிப்பு யாதெனில் மேற்படி I.A. No.212 of 2021 IN O.S. No.1192 of 2021 வழக்கானது வருகின்ற 15.12.2023 அன்று காலை 10.00 A.M. மணியளவில் மேற்கண்ட நீதிமன்றத்தில் 2–வது பிரதிவாதி யாகிய தங்களுக்கு நேரடியாகவோ அல்லது வழக்கறிஞர் மூலமாக ஆஜராக வேண்டியது. தவறும் பட்சத்தில் வாதி கோரியபடி வழக்கு தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

S. SAVARIRAM,
Advocate, Puducherry.